"KALAA POOSHANAM"
K.S.SIV[illegible]
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# திருப்புகழ்

## நல்லை முருகன் அர்ச்சனை மாலை



திருச்சிற்றம்பலம்

இராகம் : கம்சத்வனி — தாளம் : ஆதி

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இராகம் :- சிம்மேந்திரமத்திமம் தாளம் : ஆதி

உம்பர்தருத் தேனு மணிக் கசிவாகி
ஒண்டகடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்ப ரசத் தேபருகிப் பலகாலும்
என்றனு யிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தை வலத்தா லருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமாளே.

## நல்லை முருகன் திருப்புகழ்

3. இராகம் : மோகனம் தாளம் : ஆதி

ஆறுமுடியாட ஆறு முகமாட
ஆரவடமாட வரை போலி
ஆறு புய மாட ஞான அருள் ஊறி
ஆறு விழியாட நகை யாட
வீறு கலனாட வாகு வல மாட
வீசு படை யாட வினையாட
வேத பரநாத கீத கடலாட
வேடுவ குமரி வலமாட
ஏறு மயி லாடக் கூறு மயி லாட
ஈறில் பிடியானை இடமாட
ஏழுலக மாட ஏழுபவ மாட
ஞான நடமாடும் முருகேசா
நாறு மலர் நாத நூறு பத மேறி
நாத இசை பாடும் பொழில் சூழும்
ஞானத் தவ யோகி சேரும் நல்லை யூரில்
நாளும் அருள் கூறும் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இராகம் : சண்முகப்பிரியா தாளம் : மிஸ்ரசாபு

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத் தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்தொடு ரட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்

5. இராகம் : சிந்துபைரவி தாளம் : மிஸ்ரசாபு

தூவி மயில்கடல் போல அதன் மிசை
ஞாயிறென வரும் - உருவாலும்
தோளில் அசைகடம் பாலும் அடியவர்
தூவு பிறமலர் - வகையாலும்
ஆவி உனதடி மேவி சிறிதும்
விடாது சுழல்வது - அறியாயோ
ஆகம் உனதருள் ஆன கடலிடை
ஆடல் புரிவது - தெரியாதோ
தேவர் படு துயர் யாவும் பொடிபட
சேனை யொடு களம் - புகுநாளில்
தீய அவுணர்கள் மாய நெடுவரை
சாய விடு மொரு - வடிவேலா
கோவில் களில் அழகான வடிவமை
கோலம் அமர் நல்லை - உறைவோனே
கூடும் அடியவர் பாடும் இசை மழை
ஊடு நனைகின்ற - பெருமாளே.

## நல்லூர்

6. இராகம் : ரேவதி தாளம் : கண்டசாபு

அரவு மதிநாறு கொன்ற அறுகுநதி சூடுகின்ற
அசல மகள் பாதி கொண்ட திருமேனி
அணில நில நீர் விசும்பு பணிநிலவு தீ விசும்பும்
அலரி உயிராய் அமர்ந்த - பெருமானின்
திருநுதலிலே எழுந்த சுடுவிழியிலே பிறந்து
திரு மகளுலாவு கந்த - மலர்வாவி
சிறு குழலியாகி யங்கு அறுவர் தரு பால் மகிழ்ந்து
சிவை தழுவ ஆறும் ஒன்று - வடிவாகி
சிரமு மொரு மூவிரண்டு கரமுமுயர் ஆறிரண்டு
திரு விழிகள் நாலிரண்டொடு ஒரு நாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிகள் ஓரிரண்டு மருளுருவ மாகி வந்து
செகமதுய்யவே எழுந்த - முருகேசா
வரை யுருவவே லெறிந்து திருதனுடல் கூறுகண்டு
மயி லினொடு கோழி கொண்ட திறலோனே
வலிய வினை யோட இன்று விரைய வரவேனும் நன்று
மலியும் நல்லையூருகந்த - பெருமாளே.

## திருச்செந்தூர்

7. இராகம் : கல்யாண வசந்தம் தாளம் : ஆதி (திஸ்ரநடை)

தண்டே னுண்டே வண்டார்வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மானார்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ் சொற் றடிநாயேன்
மண்டோயந்தீ மென்கால் விண்டோய்
வண் கா யம் பொய்க் குடில்வேறாய்
வன் கானம்போ யண்டா முன்பே
வந்தே நிற் பொற் கழல்தாராய்
கொண்டாடும் பேர் கொண்டாடுஞ்சூர்
கொன்றாய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பாடுஞ் சீர்
குன்றா மன்றற் கிரியோனே
கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே.

## பழநி

8. இராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

நாத வித்து காலதீ நமோ நம
வேத மந்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோநம - வெகுகோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம சம்பு குமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்த - மயூரா நமோ நம - பரசூரர்
சேத தண்ட விநோதா நமோ நம
கீத கிங்கிணி பாதா நமோ நம
தீர சம் ப்ரம வீரா நமோ நம - கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோ நம - அருள் தாராய்
ஈதலும் பல கோலால பூஜையும்
ஓத லுங் குண ஆசார நீதியும்
ஈரமுங் குரு சீர்பாத சேவையும் - மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெட்பீர நாடாளு நாயக - வயலூரா
ஆதரம் பயிலூரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயி லையி லேகி
ஆதியந்த வுலா வாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடத்தில்
ஆவிநன் குடி வாழ்வான தேவர்கள் - பெருமாளே.

## தேவனூர்

9. **இராகம் : மாண்டு** **தாளம் : ஆதி (திஸ்ரநடை)**

ஆறு மாறு மஞ்சு மஞ்சும் ஆறு மாறு மஞ்சு மஞ்சும்
ஆறும் மாறு, மஞ்சு மஞ்சும் - அறுநாலும்
அறுமாய சஞ்சலங்கள் வேறதா விளங்குகின்ற
ஆரணாகமங் கடந்த - கலையான
ஈறு கூற றரும் பெருஞ் சுவாமியாயிருந்த நன்றி
யேது வேறியம்ப லின்றி - யொருதானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவு மாய் மனங்கடந்த மோன வீடடைந் தொருங்கி
யானவா வடங்க னென்று - பெறுவேனோ
மாறு கூறி வந்தெதிர்த்த சூரர்சேனை மங்க வங்க
வாரிமேல், வெகுண்ட சண்ட - வித தாரை
வாகை வேல கொன்றை தும்பை மாலை கூவிளங்கொழுந்து
வால சோம னஞ்சு பொங்கு - பகுவாய
சீறு மாசு ணங்க ரந்தை ஆறு வேனி கொண்டநம்பர்
தேசிகா கடம்பலங்கள் - புனைவோனே
தேவர் யாவருந் திரண்டு பாரின் மீது வந்து இறைஞ்சும்
தேவ னூர் விளங்க வந்த - பெருமாளே.

## சுவாமி மலை

10. **இராகம் : கம்சானந்தி** **தாளம் : ஆதி**

நிறை மதி முக மெனு - மொளியாலே
நெறி விழி கணை யெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் - ளுறவாமோ
உன திரு வடியினி யருள்வாயே
மறைபயிலரிதிரு மருகோனே
மருவலரசுரர்கள் - குலகாலா
குற மகள்தனை மண மருள்வோனே
குருமலை மருவிய - பெருமாளே

## திருத்தணிகை

11.**இராகம் : ஸ்மினிசரஞ்சனி** **தாளம் : ஆதி(திஸ்ரநடை)**

துப்பா ரப்பா டற்றீ மொய்க் கால்
சொற்பா வெளி முக் குணமோகம்
துற்றா யப்பீறற்றோ லிட்டே
சுற்றா மதனப் பிணிதோயும்
இப்பாவக் காயத்தா சைப்பா
டெற் றே யுலகிற் பிறவாதே
எத்தார் வித்தா ரத்தே கிட்டா
எட்டா அருளைத் தரவேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பாமற் பாடிச் சேவிப்பார்
தத்தாம் வினையைக் களைவோனே
தற் காழிச்சூர் செற்றாய் மெய்ப்போ
தத்தாய் தணிகைத் தனிவேலா
அப்பா கைப்பாலைப்போல் சொற்கா
வற் பா வை தனத் தணைவோனே
அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் பெருமாளே.

## பழமுதிர்சோலை

12. இராகம் சகானா தாளம் : கண்டசாபு

காரணம தாக வந்து புவிமீதே
காலனணுகா திசைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுதமான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலை மலை மேவி நின்ற - பெருமாளே.

## திருவானைக்கா

13. இராகம் : பாகேஸ்வரி தாளம் : கண்டசாபு

நாடித்தேடித் தொழுவார்பால்
நானத் தாகத் திரிவேனோ
மாடக் கூடற் பதிஞான
வாழ்வைச் சேரத் தருவாயே
பாடற் காதற் புரிவோனே
பாலைத் தேனொத் தருள்வாயே
ஆடற் றோகைக் கினியோனே
ஆனைக் காவிற் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவீழிமிழலை

14. எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ரரமேல் விடும்வேலா
திருமால் பிரமா வறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே.

15. பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காக்ஷியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

16. இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித்திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க - வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க - செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெல்லாம்.

❀❀❀❀❀❀❀❀❀



தொகுத்தவர் :-
கலாபூஷணம், சங்கீதபூஷணம்
விஸ்வநாதன் சிவஞானசேகரம்






✪ கவறிங்
கோல்ட் நகைகள்
✪ பரத நாட்டிய செற்
✪ சாறி போடர்
✪ மேக்கப் செற்
மற்றும் அழகு சாதனப் பொருட்களை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

அம்பிகாபதி
கோல்ட் கவறிங் அன் பான்சி
66, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்
அம்பிகை அழகுமாடம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org